# பத்தாம்வகுப்பு

# தமிழ்முதல்தாள்

# படைப்பாக்கவினாக்கள்

# செய்யுட்பகுதி

## வாழ்த்து

**குறுவினா**

1. மாணிக்கவாசகர் திருப்பெருந்துறை இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட விதத்தை எழுதுக.
2. மாணிக்கவாசகரை எவ்வாறு அழைப்பர்?
3. திருப்பெருந்துறை எம்மாவட்டத்தில் உள்ளது?
4. சதகம் என்றால் என்ன?

**சிறுவினா**

1. மாணிக்கவாசகர் - குறிப்பு வரைக.
2. திருவாசகம் - குறிப்பு வரைக.

## திருக்குறள்

**குறுவினா**

1. எதனை விரும்பிக் காத்தல்வேண்டும்?
2. உயர்குடி, இழிகுடி - விளக்குக.
3. எது குறைந்தால் குடி பிறப்பின் சிறப்பு அழிந்துபோகும்?
4. உயர்வு யாரிடம் அமையாது?
5. மனவலிமையுடையோர் எதிலிருந்து தவறமாட்டார்?
6. ஒழுக்கமுடையவரின் வாய்ச்சொல் எப்படியானது?
7. ஒழுக்கத்தின் விளைவு யாது?
8. காலமறிந்து செயல்பட எது தேவை?
9. திருவள்ளுவர் காட்டிய பொதுநெறி யாது?
10. திருவள்ளுவர் நாள் எப்போது?
11. திருக்குறள் எம்மொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளது?
12. திருக்குறளை முதன்முதலில் பதிப்பத்தவர் யார்?
13. திருக்குறள் எங்கே முதன்முதலில் வெளியிடப்பட்டது?
14. திருக்குறள் பதிப்பிக்கப்பட்ட ஆண்டு என்ன?

**சிறுவினா**

1. சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கங்களைக் கூறுக.
2. காலமறிந்து செயல்படுதலால் ஏற்படும் பயனைக் கூறுக.
3. காலத்திற்காகக் காத்திருத்தலின் சிறப்பைக் கூறுக.
4. பகைவரை எதிர்கொள்ளும் முறைகள் யாவை?
5. காத்திருத்தலையும் செயல்படுதலையும் உவமையின் வழி கூறுக.

## ஏலாதி

**குறுவினா**

1. கணிமேதையரின் காலம் யாது?
2. திணைமாலை நூற்றைம்பது எழுதியவர் யார்?
3. ஏலாதியின் கருத்துகள் எதை அகற்றும்?
4. வணங்கி வழியொழுகி - இப்பாடலின் எண் என்ன?

**சிறுவினா**

1. கணிமேதையர் - குறிப்பு வரைக.
2. ஏலாதி - நூற்குறிப்பு வரைக.

## சிலப்பதிகாரம்

**குறுவினா**

1. கோவலனின் தந்தை பெயர் யாது?
2. கண்ணகியின் தந்தை யார்?
3. கோவலன் யாரை விரும்பினான்?
4. காவிரிப்பூம்பட்டினத்தில் என்ன விழா நடந்தது?
5. இந்திரவிழாவில் மாதவி என்ன பாடல் பாடினாள்?
6. கோவலன் மதுரைக்கு ஏன் சென்றான்?
7. கோவலனுடன் வழித்துணையாக வந்தவர் யார்?
8. இடைக்குல மூதாட்டியின் பெயர் யாது?
9. வாழியெம் கொற்கை வேந்தே வாழி - யார், யாரிடம் கூறியது?
10. பிடர்த்தலை ஏறிய இளங்கொடி யார்?
11. கன்னியர் எழுவருள் இளையவள் யார்?
12. இறைவனை நடனமாடச் செய்தவள் யார்?
13. காளி - விளக்குக.
14. தாருகன் மார்பைப் பிளந்தவள் யார்?
15. வாயிலின் முன் கண்ணகியின் தோற்றம் எவ்வாறு இருந்தது?
16. மணியடை அரி, முத்துடை அரி - பொருள் தருக
17. மன்னனின் உதட்டில்பட்டுத் தெறித்தது எது?
18. மன்னனின் மனைவி யார்?
19. தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன் - யார்?
20. சிலப்பதிகாரத்தின் நூற்பயன் யாது?

**சிறுவினா**

1. வாணிகம் பொருட்டுக் கோவலன் மதுரைக்குச் சென்றமையை எழுதுக.
2. கோவலன், கண்ணகி - விளக்குக.
3. மாதவி - விவரி.
4. சிலப்பதிகாரம் - நூற்குறிப்பு வரைக

1. சிலப்பதிகார நூல் எழுந்த வரலாற்றை விவரி.

**நெடுவினா**

1. வழக்குரைகாதை நிகழ்ச்சியை உரையாடல் வடிவத்தில் எழுதுக.

## தமிழ் வளர்ச்சி

**குறுவினா**

1. எளிய நடையில் எதை எழுதவேண்டும்?
2. தமிழில் எதை மொழிபெயர்க்கவேண்டும்?
3. தமிழைக்காக்க யாது செய்யவேண்டும்?
4. தகத்தகாய - பொருள் எழுதுக.
5. பாரதிதாசனின் பெற்றோர் யாவர்?
6. பாரதிதாசன் - பெயர்க்காரணம் எழுதுக.
7. திருச்சிராப்பள்ளியில் யாருடைய பெயரில் பல்கலைக்கழகம் அமைந்துள்ளது?

**சிறுவினா**

1. பாரதிதாசன் - குறிப்பு வரைக.

**நெடுவினா**

1. தமிழ் வளர்ச்சி தலைப்பில் பாரதிதாசன் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## கம்பராமாயணம்

**குறுவினா**

1. இராமனின் தந்தை பெயர் யாது?
2. கைகேயியின் தோழி பெயர் யாது?
3. இராமன் வனவாசம் எத்தனை ஆண்டுகள் அமையவேண்டும்?

4. வேட்டுவத் தலைவன் யார்?
5. குகன் எத்தனைப் படகுகளுக்குத் தலைவன்?
6. கங்கையாற்றுத் தோணித்துறைக்கு உரிமை உடையவன் யார்?
7. குகனின் வலிமை யாது?
8. குகன் வாழும் தலைநகரம் எது?
9. ஒருவரைக் காணச்செல்லும்போது பின்பற்றப்படும் தமிழ் மரபு யாது?
10. நாவாய் வேட்டுவன் நாய் அடியேன் - யாரைக் குறிக்கிறது?
11. இராமனின் கண்கள் எதற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது?
12. சீதையின் நெற்றி எவ்வாறு உவமிக்கப்பட்டுள்ளது?
13. படகு எதனைப் போல் விரைந்து சென்றது?
14. என்னுயிர் அனையாய் நீ, இளவல் உன் இளையான், இந் - யார், யாரிடம் கூறியது?
15. அயோத்தியா காண்டம் எத்தனையாவது காண்டம்?
16. குகப்படலம் எத்தனையாவது படலம்?

**சிறுவினா**

1. குகனின் தோற்றத்தை விவரி
2. இராமன் குகனை எவ்வாறு பாராட்டினான்?
3. குகனும் உடன்வருவதாக நவின்றபோது இராமன் கூற்று யாது?
4. கம்பர் - குறிப்பு வரைக

**நெடுவினா**

1. குகனைப் பற்றித் தொகுத்து எழுதுக.

## நற்றிணை

**குறுவினா**

1. உழவர் எதில் விதையைக் கொண்டு வருவர்?
2. நற்றிணை குறிப்பிடும் ஊர்திகள் யாவை?
3. நற்றிணைப் பாடலில் குறிப்பிடப்படும் செல்வம் யாது:
4. மிளைகிழான் நல்வேட்டனார் - குறிப்பு வரைக
5. நற்றிணை - பொருள் தருக.

**சிறுவினா**

1. நற்றிணை குறிப்பு வரைக.
2. நற்றிணைப் பாடலின் கருத்தை மனவரைப்படமாக வரைக
3. நற்றிணை குறிப்பிடும் மருதநில வருணனையை எழுதுக.

## புறநானூறு

**குறுவினா**

1. அணிகலனில் அமைபவை எவை?
2. சான்றாண்மை இல்லாதவர் யாருடன் சேர்வர்?
3. வடக்கிருந்தவர் மன்னன் யார்?
4. கோப்பெருஞ்சோழன் யாருக்காகக் காத்திருந்தான்?
5. கோப்பெருஞ்சோழன் உயிர்துறக்கும்போது வருந்திப் பாடியவர் யார்?

**சிறுவினா**

1. புறநானூறு கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

## பெரிய புராணம்

**குறுவினா**

1. அப்பூதியடிகள் எங்கே பிறந்தார்?
2. மந்தமாருதசீதம் - பொருள் தருக.
3. கல்மிதப்பு - பொருள் தருக.
4. திருநீற்றுக்காப்பு - விவரி
5. சேக்கிழார் எங்கே பிறந்தார்?
6. சேக்கிழாரின் இயற்பெயர் யாது:.
7. சேக்கிழார் எம்மன்னனிடம் தலைமை அமைச்சராய்த் திகழ்ந்தார்?

8. சேக்கிழாரின் பட்டப்பெயர்கள் யாவை?
9. சிவனடியார் எத்தனை பேர்?
10. பெரிய புராணம் - பொருள் தருக.
11. பெரிய புராணம் பற்றித் திரு.வி.க யாது கூறுகிறார்?

**சிறுவினா**

1. அப்பூதியடிகள் நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.
2. பாவிசைப் பதிகம் பாடிப் பணிவிடம் பாற்று வரித்தார் - விவரி.

**நெடுவினா**

1. திருவாவுக்கரசர் - அப்பூதியடிகள் நிகழ்ச்சியை உரையாடல் வடிவில் எழுதுக.

## தமிழ் விடு தூது

**குறுவினா**

1. மடைகள் யாவை?
2. நல்ல ஏர்கள் குறிப்பிடுக.
3. நன்னெறி விதைகள் யாவை?
4. தமிழின் சுவைக்குச் சான்றாக அமைபவை எவை?
5. நாற்கரணங்கள் யாவை?
6. நெறிநாலு - யாவை?
7. தூர்கட்டி - விளக்குக.

சிறுவினா

1. தமிழுக்கு உவமையாகக் கூறப்பட்டனவற்றைத் தொகுத்து எழுதுக.

திருக்குறள்

குறுவினா

1. பெரியாரைத் துணைக்கோடல் - பொருள் தருக.
2. யாருடைய நட்பை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்?
3. அரிய பேறு எது?
4. வலிமையுள் வலிமை யாது?
5. வணிகர்க்கு ஊதியம் தருவது எது?
6. பொருள் செயல் வகை - பொருள் தருக.
7. யாரை இகழ்வர்ஃ
8. யாரைச் சிறப்பிப்பர்?
9. அணையா விளக்கு எனப்படுவது யாது?
10. அறம், இன்பம் தருவது எது?
11. செல்வத்தில் எவை பொருந்தி இருக்கவேண்டும்?
12. செவிலி - பொருள் தருக.
13. எஃகு - எதனைக் குறிக்கிறது?
14. ஒண்பொருள் - பொருள் தருக.

சிறுவினா

1. பெரியாரைத் துணைக்கோடலின் பயனை எழுதுக.
2. பொருளை ஆக்கும் செயல்கள் யாவை?
3. பொருளைக் காக்கும் செயல்கள் யாவை?

நெடுவினா

1. புத்தகத்தில் உள்ளவை

## தேவாரம்

**குறுவினா**

1. சிவந்த திருவடிகள் எதனைப் போன்றவை?
2. திருநாவுக்கரசர் யாருக்கு அஞ்சுவதில்லை?
3. இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை - யாருடைய வரிகள் இவை?
4. திருநாவுக்கரசர் பிறந்த ஊர் எது?
5. திருநாவுக்கரசரின் வேறு பெயர் யாது?
6. திருநாவுக்கரசரின் தொண்டுநெறி எது?
7. நாயன்மார்கள் யார்? எத்தனை பேர்?
8. தாண்டகம் பாடுவதில் வல்லவர் யார்?

9. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் ஏழு எது?
10. திருநாவுக்கரசர் பாடிய திருமுறைகள் யாவை?
11. நாமார்க்கும் எனத் தொடங்கும் பாடல் எத்திருமுறையில் இடம்பெற்றுள்ளது?
12. திருவாமூர் எதனை அடுத்து உள்ளது?

**சிறுவினா**

1. புத்தகத்தில் உள்ளவை.

## சீறாப்புராணம்

**குறுவினா**

1. காட்டுமனிதன் யாருடைய காலடியை வணங்கினான்?
2. அகழி எத்தனை காதத் தொலைவில் உள்ளது?
3. இறைத்தூதர் யார்?
4. உமறுப்புலவரின் ஆசிரியர் யார்?
5. சீறாப்புராணம் யாருடைய உதவியால் நிறைவுற்றது?
6. உமறுப்புலவர் எழுதிய வேறு நூல் எது?
7. உமறுப்புலவர் வாழ்ந்த காலம் யாது?
8. சீறாப்புராணத்தில் எத்தனை விருத்தப்பாக்கள் உள்ளன?

**சிறுவினா**

1. உமறுப்புலவர் - குறிப்பு வரைக.
2. புலியின் வெறிச்செயல் யாது?
3. முகம்மது நபியின் செயலைக் கண்டோர் வியந்து போற்றியது என்ன?

**நெடுவினா**

1. சீறாப்புராணத்தில் வரும் புலியின் நிகழ்வுகளைத் தொகுத்து எழுதுக.

## கலித்தொகை

**குறுவினா**

1. போற்றுதல் என்பது யாது?
2. அன்பு எனப்படுவது யாது?
3. செறிவு என்பது யாது?
4. நிறை - விவரி
5. கண்ணோடாவது உயிர்வௌவல் - என்பது யாது?
6. பொறை என்றால் என்ன?
7. நல்லந்துவனார் எக்காலத்தைச் சேர்ந்தவர்?
8. நல்லந்துவனார் நெய்தல்கலியின் எத்தனை பாடல்கள் பாடியுள்ளார்?
9. நெய்தல்கலி பாடியவர் யார்?
10. நாடகப் பாங்கில் அமைந்துள்ள பா எது?
11. கலித்தொகையைத் தமிழ்ச்சான்றோர் எங்ஙனம் குறிப்பிடுகின்றனர்?
12. கலித்தொகைப் பாடல்களின் தன்மை யாது?

**சிறுவினா**

1. நல்லந்துவனார் - குறிப்பு வரைக

**நெடுவினா**

1. புத்தகத்தில் உள்ளது.

## நந்திக்கலம்பகம்

**குறுவினா**

1. நீர் எவற்றையெல்லாம் தொகுத்து வருகிறது?
2. நந்திமன்னன் எவற்றை உடையவன்?
3. நந்திக்கலம்பகத்தின் காலம் யாது?
4. நந்திவர்மன் பற்றிய பாடல் பாடாண்திணையாவதற்குக் காரணம் என்ன?

**சிறுவினா**

1. புத்தகத்தில் உள்ளவை.

## நாலாயிரத் திவ்விய பிரபந்தம்

**குறுவினா**

1. வயல்களில் எவை நீந்துகின்றன?
2. குலசேகரர் குறிப்பிடும் பெருமான் எங்கே உறைந்துள்ளார்?
3. குலசேகரர் எங்கு பிறந்தார்?
4. குலசேகரப் பெருமாள் என அழைக்கப்பட்டதன் காரணம் யாது?
5. குலசேகரர் வடமொழியில் எழுதிய நூல் எது?
6. திருவரங்கத்தின் மூன்றாவது மதிலைக் கட்டியவர் யார்?
7. குலசேகரரின் நூற்றாண்டு எது?
8. வைணவத்தின் முதற்கடவுள் யார்?

**சிறுவினா**

1. புத்தகத்தில் உள்ளவை.

## நிற்க நேரமில்லை

**குறுவினா**

1. வழித்தடத்தை எது அடைக்கிறது?
2. மலைப்பகுதியில் உள்ளவை எவை?
3. நடக்கும் பாதையில் வளர்வது எது?
4. துணையாக வருபவை எவை?
5. பணிணை முடித்தபின் யாது செய்யவேண்டும்?
6. சாலை இளந்திரையன் பெற்றோர் யாவர்?
7. சாலை இளந்திரையனால் தோன்ற காரணமானவை எவை?
8. சாலை இளந்திரையன் எவ்விருது பெற்றார்?
9. நிற்கநேரமில்லை எக்கவிதைத் தொகுப்பில் உள்ளது?
10. சாலை இளந்திரையனின் தமிழக விருதுபெற்ற நூல்கள் எவை?

**சிறுவினா**

1. சாலை இளந்திரையன் - நூற்குறிப்பு வரைக
2. சாலை இளந்திரையன் உடல் உறுப்புகளின் செயல்கள் என்று எவற்றைக் குறிப்பிடுகிறார்?

நெடுவினா

1. சாதனைப் பூக்களாகச் சாலை இளந்திரையன் குறிப்பிடுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

**தயாரிப்பு**

**ரா.தாமோதரன்,**
**அ.மே.நி.பள்ளி,**
**மெலட்டூர் 614 301.**
**தஞ்சை மாவட்டம்**
**tamileclass@gmail.com**